இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 319 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 15 – ஞாயிற்றுக்கிழமை 29 ஜூன் 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 319 : Thiruvalluvar Year - 2056 - Aani 15 - Sunday 29 June 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## 80 ஆண்டுகளை பொது வாழ்க்கைக்கு ஒப்படைத்த அறிவுப் புதையல்!

# தொட்ட துறைகளில் எல்லாம் கோலோச்சியவர் கலைஞர்!

## சாகித்திய அகாதெமி – ஜே.என்.யு. இணைந்து நடத்திய, முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுக் கருத்தரங்கில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.6.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், சாகித்திய அகாதெமி மற்றும் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் சிறப்புநிலைத் தமிழ்த்துறை இணைந்து நடத்திய "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுக் கருத்தரங்கம்" தொடக்க விழாவில், "முத்தமிழறிஞர் கலைஞரின் இலக்கிய ஆளுமை" என்ற சிறப்பு மலரை வெளியிட்டார். இவ்விழாவில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, திருமதி கனிமொழி சோமு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சாந்திஸ்ரீ துலிப்புடி பண்டிட், சாகித்ய அகாதெமி செயலாளர் முனைவர் சீனிவாச ராவ், கவிப்பேரரசு வைரமுத்து, தமிழறிஞர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரநிதிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஜூன் 29 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (27.6.2025) சென்னை, கலைவாணர் அரங்கில், சாகித்திய அகாதெமி மற்றும் ஜவஹர்லால்நேரு பல்கலைக்கழகம் சிறப்பு நிலைத் தமிழ்த்துறை இணைந்து நடத்திய முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுக் கருத்தரங்கைத் தொடங்கி வைத்து, உரையாற்றுகையில், "80 ஆண்டுகளை பொதுவாழ்க்கைக்கு ஒப்படைத்த அறிவுப் புதையல்! தொட்ட துறைகளில் எல்லாம் கோலோச்சியவர் கலைஞர்!" எனப் புகழாரம் சூட்டினார்.**

முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

சாகித்திய அகாதெமி மற்றும் ஜவஹர்லால்நேரு பல்கலைக்கழகம் சிறப்பு நிலைத் தமிழ்த்துறை இணைந்து நடத்தும் "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுக் கருத்தரங்கம்" நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக்கொண்டிருக்கும் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.

**காலம் கடந்தாலும் - சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப் பட்ட கருத்தரங்கு!**

சாகித்திய அகாதெமியும் ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் சிறப்புநிலைத் தமிழ்த்துறையும் நடத்தும் இந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுக் கருத்தரங்கை தொடங்கி வைத்து, அதேநேரத்தில் சிறப்பு மலரை வெளியிடும் வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கு தலைவர் கலைஞரின் மகனாக மட்டுமல்ல, தமிழ்நாட்டு முதலமைச்சராகவும் பெருமித உணர்வோடு நான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்! காலம் சற்றே கடந்திருந்தாலும், இந்தக் கருத்தரங்கை சிறப்பான வகையில் ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்!

**ஒரு தலைப்புக்குள் சுருக்கப்பட முடியாதவர் கலைஞர்!**

கவிதை, புனைகதை, செவ்வியல், நாடகம், திரை வசனம், உரைநடை ஆகிய தலைப்புகளில் நீங்கள் கருத்தரங்கு நடத்துவதே, ஒரு தலைப்புக்குள் சுருக்கிட முடியாத பன்முகத்திறன் பெற்றவர் நம்முடைய தலைவர் கலைஞர் என்பதை எடுத்துக்காட்டும் வகையில், இந்தக் கருத்தரங்கில் பங்கேற்று, கருத்துகளால் புது ஒளியுமிழ வந்திருக்கும் அனைத்துப் பேராசிரியர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்!

தலைவர் கலைஞரின் மேடை உரைகள் இலக்கியத்தின் மறுமுகம்! தலைவர் கலைஞரின் சட்டமன்ற உரைகள், சட்டமன்ற மாண்புக்கு இலக்கணம்! அவர் நடத்திய விவாதங்கள், அழகான ஆழமான கருத்து மோதல்கள்! தன்னுடைய வாழ்நாளில் 80 ஆண்டுகளை பொதுவாழ்க்கைக்கு ஒப்படைத்த மாபெரும் தலைவர் அவர்! அவர் நடத்திய போராட்டங்களும் பெற்ற வெற்றிகளும் இந்தியச் சமூகத்தை உணர நினைக்கும் எல்லோருக்குமான படிப்பினைகளாக அமைந்திருக்கிறது!

"தென்றலைத் தீண்டியதில்லை; ஆனால், தீயைத் தாண்டியிருக்கிறேன்" என்று அனுபவ பூர்வமாகச் சொன்னார் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்! அவரின் வாழ்வையே தமிழ்ச் சமூகத்தின் உயர்வுக்காக - மேம்பாட்டுக்காக அர்ப்பணித்த காரணத்தால்தான் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஐம்பது ஆண்டுகள் தமிழர்களுக்கான இயக்கத்திற்குத் தலைவராக அவரால் இருக்க முடிந்தது!

தொட்ட துறைகள் எல்லாவற்றிலும் கோலோச்சிய தலைவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். இலக்கியத்தைத்தான் இளைப்பாறும் நிழலாகக் கருதினார்! அதனால்தான் "எனது செங்கோலை யாரும் பறித்து விடலாம்; ஆனால், எனது எழுதுகோலை யாராலும் பறிக்க முடியாது" என்று சொன்னார் தலைவர் கலைஞர் அவர்கள்!

**சாகித்திய அகாதெமியின் பணி மகத்தானது!**

இலக்கியத்தின் வழி இந்தியர்கள் அனைவரையும் ஒன்றாக இணைக்கும் மகத்தான பணியினை சாகித்ய அகாதெமி செய்து வருகிறது. ஒருவரின் இலக்கியத் தகுதி என்பதற்கு சாகித்திய அகாதெமிதான் அளவுகோல் எனும் அளவுக்கு புகழோடு செயல்பட்டு வருகிறது! எழுத்தாளர்களையும், மொழிபெயர்ப்பாளர்களையும் ஊக்குவிக்கும் சாகித்திய அகாதெமியின் பணி மகத்தானது! போற்றுதலுக்குரியது! அவர்கள் கலைஞரின் நூற்றாண்டு விழாவை J.N.Uவுடன் இணைந்து இங்கு கொண்டாடுவது சிறப்புக்குரிய ஒன்றாக அமைந்திருக்கிறது!

இந்தியாவில் எத்தனையோ பல்கலைக்கழகங்கள் இருந்தாலும் J.N.Uவுக்கு என்று, தனிக் குணம் உண்டு! கருத்தாழமிக்க உரையாடல்களுக்கு இடமாக உள்ள J.N.Uவில் வெளிவரும் ஆய்வுகள், உலக அளவில் பேசப்படுகிறது!

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

### கலைஞரின் சட்டமன்ற உரைகள் சட்டமன்ற மாண்புக்கு இலக்கணம்!

**தலைவர் கலைஞரின் மேடை உரைகள் இலக்கியத்தின் மறுமுகம்! தலைவர் கலைஞரின் சட்டமன்ற உரைகள், சட்டமன்ற மாண்புக்கு இலக்கணம்! அவர் நடத்திய விவாதங்கள், அழகான ஆழமான கருத்து மோதல்கள்! தன்னுடைய வாழ்நாளில் 80 ஆண்டுகளை பொதுவாழ்க்கைக்கு ஒப்படைத்த மாபெரும் தலைவர் அவர்! அவர் நடத்திய போராட்டங்களும் பெற்ற வெற்றிகளும் இந்தியச் சமூகத்தை உணர நினைக்கும் எல்லோருக்குமான படிப்பினைகளாக அமைந்திருக்கிறது!**

# தமிழ்நாட்டில் பொறியியல் படிப்பிற்கான கலந்தாய்வு!

## ஜூலை 14ல் தொடங்குகிறது! அமைச்சர் கோவி.செழியன் அறிவிப்பு!

*சென்னை, ஜூன் 29 -*

தமிழ்நாட்டில் பொறியியல் படிப்புகளுக்கான, பொதுப்பிரிவு கலந்தாய்வு ஜூலை 14ஆம் தேதி தொடங்கும் என, உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் பி.இ., பி.டெக் உள்ளிட்ட பொறியியல் படிப்பு மாணவர் சேர்க்கை கலந்தாய்வுக்கான தரவரிசைப் பட்டியலை உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் வெளியிட்டார்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைப்பு பெற்ற 445 அரசு மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நடத்த தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாக கூறினார். பொறியியல் படிப்பு தரவரிசையில் 200க்கு 200 கட்ஆப் மதிப்பெண்ணை 144 மாணவ, மாணவிகள் எடுத்துள்ளதாக கூறினார். மாணவ, மாணவிகள் தங்களது தரவரிசை எண்ணை www.tneaonline.org என்ற இணையதளம் வழியாக தெரிந்து கொள்ளலாம் என்றும் அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் கோவி. செழியன், பொறியியல் படிப்பில் சேருவதற்கு மொத்தம் 3.02 லட்சம் மாணவ, மாணவிகள் விண்ணப்பித்துள்ளதாக கூறினார். அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கான 7.5% இட ஒதுக்கீட்டின் கீழ் 51,004 மாணாக்கர்கள் விண்ணப்பித்துள்ளதாகவும், பொறியியல் படிப்புகளுக்கான, பொதுப்பிரிவு கலந்தாய்வு ஜூலை14 ஆம் தேதி தொடங்கும் என்றும் தெரிவித்தார். பொறியியல் படிப்பில், சிறப்புப் பிரிவு மாணவர்களுக்கான கலந்தாய்வு ஜூலை 7 முதல் ஜூலை 11ம் தேதி வரை நடைபெறும் என்றும் பொறியியல் படிப்பிற்கான துணை கலந்தாய்வு ஆகஸ்ட் 21 முதல் 23 ஆம் தேதி வரை நடைபெறும் என்றும் உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் குறிப்பிட்டார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசின் திட்டங்களால் – தமிழ்நாட்டில்

# 6 லட்சம் மகளிர் தொழில் முனைவோர்களாக உள்ளனர்!

## 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' பாராட்டு!

**சென்னை, ஜூன் 29 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு, மகளிர் முன்னேற்றத்திற்கு செயல்படுத்தியுள்ள திட்டங்கள் மூலம், 6 லட்சத்திற்கும் அதிகமான பெண்கள் தொழில் முனைவோர்களாக வெற்றிநடை போடுவதாக 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளிதழ் பாராட்டு தெரிவித்துள்ளது.**

தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையில் பெண்களின் பங்களிப்பு குறித்து நேற்று 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' சிறப்பு கட்டுரை வெளியிட்டுள்ளது.

பெண்களை தொழில் முனைவோர்களாக்க தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. உதயோகினி திட்டம் மூலம் புத்தொழில் தொடங்குவதற்கு வங்கி கடன் வழங்குவது மட்டுமின்றி, சவால்களை எதிர்கொள்ளுதல், திறனை மேம்படுத்துதல், தொழிற்சாலை செயல்பாடுகள் குறித்து பெண்களுக்கு பயிற்சியளித்து, பொருட்களை வணிகப்படுத்துவது வரை, தமிழ்நாடு அரசு ஊக்கமளித்து வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு உதவும் மகளிர் திட்டம் பெண்கள் முன்னேற்றத்தில் மிகப்பெரிய பங்காற்றுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால், தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறையில் மட்டும் 6 லட்சத்து 23 ஆயிரம் பெண்கள் தொழில்முனைவோர்களாக உயர்ந்துள்ளனர். தென்னிந்தியாவிலேயே மகளிர் தொழில்முனைவோர் அதிகமுள்ள மாநிலமும் தமிழ்நாடுதான்.

மாநிலத்தில் எம்.எஸ்.எம்.இ. துறையில் மகளிர் தொழில்முனைவோர் விகிதம் 23.5 சதவிகிதம் அளவிற்கு உயர்ந்திருப்பதாகவும், தேசிய அளவில் சிறுதொழில் துறையில் தமிழ்நாட்டு மகளிர் 10.22 சதவிகிதம் பங்களிப்பதாகவும் கூறியுள்ளது.

தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களும், மகளிர் முன்னேற்றத்திற்கு அளிக்கும் உத்வேகமும்தான் பெண்களின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய காரணம் என்று 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது.

# இந்திய அரசியலமைப்புச் சாசனத்தை ஆர்.எஸ்.எஸ். ஒருபோதும் ஏற்காது!

## காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஜூன் 29-*

இந்திய அரசியலமைப்பு சாசனத்தை ஆர்.எஸ்.எஸ். அமைப்பு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என, காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

இந்திய அரசியலமைப்பில் சமூகநலம் மற்றும் மதசார்பின்மை ஆகிய வார்த்தைகளை நீக்க வேண்டும் என ஆர்.எஸ்.எஸ். அமைப்பு கடந்த வியாழனன்று கருத்து தெரிவித்திருந்தது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ், சமூகவலைதளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில், கடந்த 1949 ஆம் ஆண்டு அம்பேத்கர், நேரு உள்ளிட்டவர்களால் உருவாக்கப்பட்ட அரசியல் சாசனத்தை, ஆர்.எஸ்.எஸ். அமைப்பு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் சாசனத்தில் மனுஸ்மிரிதி இணைக்கப்படாததால், ஆர்.எஸ்.எஸ். தொடர்ந்து எதிர்த்து வருவதாகவும், புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என்பது ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க.வின் தொடர் கோரிக்கை என்றும் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

கடந்த 2024ம் ஆண்டு மக்களவை தேர்தலில், மோடியின் தேர்தல் பிரச்சாரமும் இதனை ஒட்டியே இருந்ததாகவும், ஆனால், மக்கள் அதனை ஒட்டு மொத்தமாக புறக்கணித்து விட்டதாகவும் ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட்டுள்ளார்.